**செ. கு. எண்: 109** **நாள்: 04.05.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.5.2013

சென்னை பெருநகர காவல், சென்னை மத்திய குற்றப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. M.கிருஷ்ணகுமார் அவர்கள் 25.4.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், கரிவலம்வந்த நல்லூர் காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு T.வைகுண்டமணி அவர்கள் 25.4.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் ஆலங்குளம் - ஊத்துமலை சாலையில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், புளியம்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. J.ஞானக்கண் ஜெயசிங் அவர்கள் 27.4.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், வைப்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.கோவிந்தராஜ் அவர்கள் 28.4.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், கோடம்பாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.குமாரசாமி அவர்கள் 30.4.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், குன்றத்தூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.ராஜேந்திரன் அவர்கள் 1.5.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் கோவிந்தராஜ், குமாரசாமி, தலைமைக் காவலர்கள் கிருஷ்ணகுமார், ஞானக்கண் ஜெயசிங், ராஜேந்திரன் மற்றும் காவலர் வைகுண்டமணி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ், தலைமைக் காவலர்கள் கிருஷ்ணகுமார், ஞானக்கண் ஜெயசிங், உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் குமாரசாமி, தலைமைக் காவலர் ராஜேந்திரன் மற்றும் சாலை விபத்தில் உயிரிழந்த காவலர் வைகுண்டமணி ஆகியோர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**